தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)

"இசை, நாட்டிய, நாடக, கிராமியக் கலை விழா"

நாள்: 07-11-2024 வியாழக்கிழமை நேரம்: மாலை 5.30 மணி
இடம்: திறந்தவெளி கலையரங்கம், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகம்.
"பொன்னி", 31, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28.

வரவேற்புரை : கலைமாமணி திரு. அ.ஜாகிர் உசேன் அவர்கள்
பொதுக்குழு உறுப்பினர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தலைமை : திருமதி. விஜயா தாயன்பன் அவர்கள்
உறுப்பினர் - செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

முன்னிலை : திரு. மயிலை த.வேலு அவர்கள்
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்

சிறப்புரை : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு சிவ. வீ.மெய்யநாதன் அவர்கள்

கலை நிகழ்ச்சிகள்

மாலை 6.00 மணி
கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா குழுவினரின்
பரத நாட்டியம்

மாலை 7.00 மணி
திருமதி சித்ரா முரளிதரன் அவர்களின்
நிருத்தியக்ஷேத்ரா நடனப்பள்ளி
மாணவியர் வழங்கும் பரத நாட்டியம்

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!

வரவேற்கும்: M.R.M.பாலசுப்பிரமணியன்
மாவட்ட அவைத்தலைவர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2024) கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் வழங்கிடும் வகையில் பில்லூர் III கூட்டுக் குடிநீர் திட்டத்தினை குறித்த காலத்தில் செயல்படுத்தி சிறப்பான முறையில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோவை மண்டல தலைமை பொறியாளர் கே. செல்லமுத்து மற்றும் துறை பணியாளர்களை பாராட்டினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### ரூ.300 கோடி மதிப்பீட்டில்

# கோவையில் தந்தை பெரியார் நூலகம் - அறிவியல் மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**கோவை, நவ. 7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2024) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரின் அறிவுதாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும் என்றும், இதில் உலகத்தரம் வாய்ந்த நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணைய வளங்களும் இடம்பெறுவது மட்டுமின்றி, விண்வெளி, எந்திரவியல், மெய்நிகர் தோற்றம், இயற்கை அறிவியல் என பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கோவை மத்திய சிறைச்சாலைக்கு சொந்தமான 6 ஏக்கர் 98 சென்ட் நிலத்தில் (கோவை வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமம்) 1.98 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த மையத்தில், தரைத்தளத்தில் ஆடிட்டோரியம் மற்றும் அறிவியல் மையம், முதல் தளத்தில் அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் போட்டி தேர்வுகளுக்கான நூலகம், மூன்றாம் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம், நான்காம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, ஐந்தாம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஆறாம் தளத்தில் பருவ இதழ்கள் மற்றும் இன்குபேஷன் சென்டர், ஏழாம் தளத்தில் அறிவியல் மையம், ஆங்கில புத்தகப்பிரிவு மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

மேலும், 4 மின் தூக்கிகள், 10 KLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பேனல் அறை, குடிநீர் மற்றும் கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இக்கட்டடமானது, 2026 ஜனவரி மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கணபதி பி. ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி சோ. மதுமதி, பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) முனைவர் பொ. சங்கர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை உட்பட 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.7-

சென்னை உட்பட 11 மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, தமிழ்நாட்டில் இன்று குறிப்பிட்ட சில மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்தமிழகம் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7,8 ஆகிய தேதிகளில் 15 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், விருதுநகர், மதுரை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நாளை (நவ., 8ம் தேதி) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.


தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

07/11/2024 வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் 'கல்லணை' செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024


